20th September 1958]

நம்முடைய ராஜ்ய சர்க்காரின் யோசனைகள் அங்கு வைக்கப்பட்டு "லிக்விடேஷன்" இப்பொழுது செய்யவேண்டாம் என்று உயர்நீதி மன்றத்திடம் வற்புறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதை சர்க்கார் செய்ய முடியாது. பங்குதாரர்கள் எல்லோரும் சேர்ந்து அதை நடத்தவேண்டுமென்பதற்காக உயர்நீதி மன்றத்திற்கு அவர்கள் மனுக்கள் போட்டு, அட்மினிஸ்டிரேட்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த "அட்மினிஸ்டிரேட்டர்கள்" இந்த மில்லை நடத்துவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ரூ. 5 லட்சம் கடன் வாங்கி பாக்கியிருக்கிற சம்பளத்தை கொடுத்தார்கள். மேற்கொண்டு கடன்வாங்கி இந்த மில்லை நடத்துவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளெல்லாம் எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதை பரிசீலனை செய்து உயர்நீதி மன்றம் முடிவு செய்யும். தொழிலாளர்கள் பிரதிநிதிகள் உயர்நீதி மன்றத்தில் தங்கள் வாதங்களைச் சொல்லிக் கொள்ளலாம்.

MR. SPEAKER : Questions are over.

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

BILL PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce that the Madras District Municipalities (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 27 of 1958) and the Madras City Municipal (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 28 of 1958) have been passed by the Legislative Council on the 18th September 1958 without any amendment.

III.—CALLING ATTENTION TO THE RETRENCHMENT OF PEONS IN THE COMMERCIAL TAX DEPARTMENT.

MR. SPEAKER : The hon. Member, Sri K. Anbazhagan, has given notice of a motion under rule 40. He will please refer to it briefly.

* SRI K. ANBAZHAGAN : அவைத் தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கத்தினுடைய வணிக வரித் துறையிலுள்ள கடைநிலை ஊழியர்களாக இருந்த ஏறத்தாழ 240 ஊழியர்கள் இன்று திடீரென்று வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற ஒரு இக்கட்டான நிலைமை தோன்றியிருக்கிறது. கடந்த 1958-ம் வருஷம் ஆகஸ்ட்டுமீ 27ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3153-இன் படி அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு உத்தரவில் அவர்களெல்லாம் 1958-ம் வருஷம் அக்டோபர்மீ 1-ந்தேதியிலிருந்து வேலையிலிருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். வணிக வரித்துறையானது காமதேனு, கற்பக விருட்சமாக இருந்தபோதிலும், அதில் ஏற்கனவே கடைநிலை ஊழியர்களாக இருந்து துன்பப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் இப்பொழுது கடைத் தெருவில் நிற்கின்ற நிலைமைக்குத் திடீரென்று ஆளாக்கப்பட்டிருப்பது மிகுந்த வேதனை அளிப்பதாகும்.

இந்த 240 ஊழியர்களும் வேலையைவிட்டு நீக்கப்பட்டால், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினர்கள் ஏறத்தாழ 1,000 பேர்கள் அல்லலுற்று, வாழ்க்கை நடத்த முடியாமல் துன்பத்திற்கு ஆளாக்கப்படுவார்கள். வணிகவரி துறையைப் பொருத்தவரையிலே டாக்டர் லோகநாதன் அவர்கள் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கூறிய ஒரு கருத்தின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று ஒரு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்கள் இப்படி கடைநிலை ஊழியர்களை வேலையைவிட்டு நீக்குவதால் பெரிய சீர்திருத்தத்தை ஏற்படுத்தலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. டாக்டர் லோகநாதன் அவர்கள் அப்படியே